GODependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்

அக்டோபர் 2025



## தேவனால் மறுபடியும் ஒரு அற்புதம் செய்ய முடியும்

**நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்; மோவாபியரையும் உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார்.**
**(2 இராஜாக்கள் 3: 17-18)**

2 இராஜாக்கள் 3 மற்றும் 4ம் அதிகாரங்களில், தன் ஊழியக்காரனாகிய எலிசா மூலம் தேவன் செய்த ஆறு அற்புதங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம்: தாகமாயிருந்த இஸ்ரவேல் இராணுவத்திற்கு தண்ணீர் மற்றும் மோவாபியர் மீது வெற்றி, ஏழை விதவைக்கு ஒரு அற்புதமான எண்ணெய் பெருக்கம், சூனேமிய பெண்ணுக்கு பிள்ளைப் பேறு, இறந்த அவளுடைய மகனுக்கு உயிர் கொடுத்தல், கூழில் இருந்த விஷத்தை நீக்குதல், மற்றும் ஒரு உணவுப் பெருக்கம். இந்த அற்புதங்கள் ஒவ்வொன்றும் தம் ஜனங்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்கான தேவனுடைய வல்லமை மற்றும் கரிசனையைப் பற்றி கூறுகின்றது.

2 இராஜாக்கள் 3ம் அதிகாரத்தில், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராம், யூதா மற்றும் ஏதோமிய ராஜாக்களின் உதவியுடன், கலகம் செய்து கொண்டிருந்த மோவாபியருடன் போரிடச் சென்றான் என வாசிக்கிறோம். அவர்கள் புறப்படுவதற்கு முன்பு, தேவ சித்தம் இன்னதென்று அறிய ராஜா எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஏதோம் வனாந்தரவழியாய் அணிவகுத்து சென்ற ஏழு நாட்களுக்குப் பின், அவர்களுக்கு தண்ணீர் இல்லாமல் போயிற்று. அப்பொழுதும் கூட இஸ்ரவேலின் ராஜா தேவனைத் தேட தயாராக இல்லை. ஆனால், தேவ பயமுள்ள யூத ராஜாவாகிய யோசபாத் அந்தச் சூழ்நிலைக்கான தேவனுடைய வார்த்தை என்ன என்று அறிந்து கொள்வதற்கான முயற்சியை ஆரம்பித்து வைத்தான். அதன் பின்பு, மூன்று ராஜாக்களும் தேவனுடைய தீர்க்கதரிசியான எலிசாவைச் சந்திக்கச் சென்றனர். தேவன் எலிசா மூலமாக பேசி, அவர்களுடைய தேவை சம்பந்தமாக ஒரு தனித்துவமான வாக்குத்தத்தத்தை அவர்களுக்குக் கொடுத்தார். ஒரு வனாந்திரத்தில், மழையைப் பார்க்காமல் அவர்கள் தண்ணீர் பெறுவது எப்படி? தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை.

தேவன் சொன்னபடி, அடுத்த நாள் காலையில் அவர்கள் தண்ணீரைப் பெற்றனர், வறண்ட பள்ளத்தாக்கு தண்ணீரினால் நிரம்பியது. அது மட்டுமல்ல, மோவாபியருக்கு ஒரு குழப்பத்தை உண்டாக்கி, அவர்கள் மீது ஒரு வெற்றியையும் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்தார். தேவனுடைய இடைபடுதலால், ஒரு பெரிய அழிவு தவிர்க்கப்பட்டது. இல்லையெனில், அந்த மூன்று ராஜாக்கள் மற்றும் அவர்களின் இராணுவத்தினருக்கு ஒரு பெரிய தோல்வி மற்றும் மரணம் உண்டாயிருக்கக் கூடும். அவர்கள் தேவனைத் தேடினபோது, அவர்கள் நினைத்துப் பார்க்காத ஒரு அற்புதத்தை தேவன் செய்தார்; அவர்களுக்கு தண்ணீரையும் வெற்றியையும் கொடுத்தார்.

நம் உடல் ஆரோக்கியம், பொருளாதாரம், வேலை, உறவுகள் போன்ற பல காரியங்களில் நமக்கு பிரச்சனைகள் இருக்கலாம். அது என்னவாக இருந்தாலும், நாம் ஒரு பிரச்சனையின் நடுவில் இருக்கும் போது, வரவிருக்கிற தவிர்க்க முடியாத சூழ்நிலையை எதிர்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று நமக்குத் தெரியாத போது, நாம் தேவனைத் தேடுவது நமக்கு நல்லது. நாம் ஒன்றை செய்ய துவங்குவதற்கு முன்பு தேவனைத் தேட மறந்தோ அல்லது தவறியோ இருக்கலாம். நாம் அதை உணரும் போது, அது தேவனைக் கருத்தாய் தேடுவதற்கான நேரம் ஆகும். ஒருபோதும் தேவனைத் தேடாமல் இருப்பதை விட, தாமதமாகவேனும் அவரைத் தேடுவது நல்லது. எல்லாவற்றிற்கும் மேலாக, நமக்கு உதவி செய்வதும், விடுவிப்பதும் கர்த்தருடைய பார்வையில் எளிதான காரியம் ஆகும். தேவனைப்பற்றிய நம் நம்பிக்கையும் இதுவே!

**-சகோ. அற்புதராஜ் சாமுவேல் , பெங்களூரு.**

### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

**தேவனுடைய வார்த்தையை வாசித்து ஆராய்ந்து பார்க்க நேரம் ஒதுக்குங்கள். அது உங்களை மாற்றும்.**

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த அக்டோபர் 2025 இதழுடன் கடந்த ஒரு வருடமாக 12 மாதங்களும் தொடர்ச்சியாக வெளிவருவதற்கு தேவன் கிருபை பாராட்டியிருக்கிறார். சில பல காரணங்களினால், அவை வெளியிடப்படும் நாட்களில் வித்தியாசங்கள் இருந்தன. பல்வேறு தடைகள் பிரச்சனைகள் மத்தியிலும் கடந்த 12 மாதங்களும் வெளி வர வதற்கு தேவன் பாராட்டின கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். செய்திமடல் குறித்த வாசகர்களின் சமீபத்திய கருத்துக் கணிப்பை கடந்த இதழில் வெளியிட்டு இருந்தோம். இந்த மாதமும் அவைகளை உங்கள் பார்வைக்காக வைத்துள்ளோம். அவர்களைப் பார்த்து தேவனைத் துதியுங்கள்; ஆசிரியர் குழுவிற்காக ஜெபியுங்கள்.

மத்தேயு 7:24-27 ல் இயேசுகிறிஸ்து கூறின உவமை சமீபத்தில் என்னை சிந்திக்க வைத்தது. “ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். (வ24)

### தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பது

தேவனுடைய வார்த்தைகளை கேட்பது என்பது நமது விசுவாசத்தின் நுழைவாயில். ”விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.” (ரோமர் 10:17). ஒவ்வொரு முறையும் நாம் பரிசுத்த வேதாகமத்தை திறந்து வாசிக்கும் போது, தேவ ஊழியர்களின் பிரசங்கங்களைக் கேட்கும் போது, தேவன் நம்மோடு பேசுகிறார். அவைகளை நாம் கேட்க வேண்டும். கேட்பது என்பது வெறுமனே மேலோட்டமாக காதில் பெற்றுக் கொள்வது அல்ல. அவரது சித்தம் என அறிந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு கேட்க வேண்டும். தேவன் பேசிக் கொண்டே தான் இருக்கிறார். அவசரக் கதியில் நாம் தான் கேட்கத் தவறி விடுகிறோம். எனவே ஒவ்வொரு முறையும் பரிசுத்த வேதாமத்தை நாம் வாசிக்கும் போது ”கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன்” (1 சாமு. 3:10) என்ற ஜெப உணர்வுடன் வாசிக்க வேண்டும்.

### தேவனுடைய வார்த்தைகளின்படி செய்வது

தேவனுடைய வார்த்தைகளை தேவன் பேசுவதை நாம் கேட்டால் மட்டும் போதாது அதன்படி செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தைகளைக் குறித்த அறிவு ஒரு கட்டப்பட இருக்கும் ஒரு கட்டிடத்திற்கான வரைபடம் மட்டுமே. கட்டினால் மட்டுமே அந்த கட்டிடம் பயன்பாட்டுக்கு வரும். தேவனுடைய வார்த்தைகளின் படி ’செய்வது’ தான் கட்டிடத்தை கட்டி எழுப்புவதாகும். கேட்பது மிகவும் எளிது; ஆனால் அதன்படி செய்வது சற்று கடினமானது; அதற்கான விலைக் கிரயத்தை நாம் செலுத்த வேண்டியது இருக்கும்.

ஆனால், தேவனுடைய வார்த்தையானது நமது அன்றாட தீர்மானங்களையும் உறவுகளையும் வாழ்க்கையின் முன்தெரிவுளையும் நிர்ணயிக்க அனுமதித்தால் மாத்திரமே, கேட்ட வார்த்தைகளின்படி செய்வது எளிதாக இருக்கும். ’அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.’ (யாக்கோபு 1:22)

### புத்தியுள்ள மனுஷனாக இருப்பது

வசனம் 26 ல் இயேசு கூறினார்: ’நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்’. இந்த வசனத்தில் சொல்லப்பட்ட புத்தி இல்லாத மனுஷன் ஒன்னும் வேத வசனத்தை வாசிக்காதவனோ கேட்காதவனோ அல்ல; அவன் கேட்டான் ஆனால் அதன்படி செய்யவில்லை.. எனவே கேள்வி அறிவு ஒருவனை புத்திமான் ஆக்குவது இல்லை. வேத அறிவை தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ற விதமாக நம்மை அர்ப்பணிக்க தீர்மானித்து அதன்படி செய்யும்போது தன் நாம் புத்தியுள்ள மனுஷன் ஆகிறோம். வீட்டின் வழித்தோற்றம் எவ்வளவு அழகாக இருந்தாலும் அதன் உறுதித்தன்மை என்பது அதன் அஸ்திபாரத்தில் தான் இருக்கிறது.. பெருமழை பெருவெள்ளம் புயல் காற்று போன்ற சூழ்நிலைகளில் வீட்டின் அஸ்திபாரத்தைப் பொறுத்து அது தாக்குப் பிடிக்கும் அல்லது தகர்ந்து போகும்.

நாமும் கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் நமது அஸ்திவாரத்தை இட்டு நமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும்போது, நம்முடைய வாழ்க்கையில் அவ்வப்போது வீசும் பெருமழை பெருவெள்ளம் புயல்காற்று சூழ்நிலைகளில் இவை ஒன்றும் நம்மை அசைப்பதில்லை. அப்படி ஒரு புத்திமானாக நடந்துகொள்ள நம்மை அர்ப்பணிப்போமா?

இந்த வருட சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR2025) சார்ந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றாக நடைபெற ஆரம்பித்துள்ளன. 02 அக்டோபர் 2025 அன்று 12 மணி நேர தொடர் வேத வாசிப்பு நிகழ்ச்சி ஒன்று தமிழில் நடைபெற்றது. அதில் பலரும் உற்சாகமாக கலந்து கொண்டனர். ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில், குடும்பமாக மற்றும் சபை அல்லது குழுவாக இந்த நாளை எப்படி அனுசரிக்கலாம் என்பது குறித்த விபரங்கள் இந்த இதழில் கொடுத்துள்ளோம். குறிப்பாக இந்த வருடத்தில், நமது வேத வாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் மற்றும் நமது வேத வாசிப்பு சவால்களில் இணைந்திருக்கும் பல்வேறு நாடுகளில் உள்ளவர்கள் அந்தந்த நாடளாவிய நிகழ்வுகள் நடத்த திட்டமிடுகிறோம். எனவே இவற்றில் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பை நாடுகிறோம்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**



**இயேசுவின் வார்த்தைகளை நேசிக்காமல் நீங்கள் அவர் மீது நேசம் கொள்ள முடியாது. - R.C. ஸ்ப்ரெளல்**

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்

**- R.ஸ்டான்லி**




சீர்திருத்தவாதிகளின் இறையியல் கோட் பாடுகளின் சுருக்கம் லத்தீன் மொழியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் இதோ -

1. ”Sola Scriptura” (Scripture alone!) - பைபிள் மட்டுமே!
2. ”Sola Fide” (Faith alone!) - விசுவாசம் மட்டுமே!
3. ”Sola Gratia” (Grace alone!) - கிருபை மட்டுமே!
4. ”Solo Christo” (Christ alone!) - கிறிஸ்து மட்டுமே!
5. ”Soli Deo Gloria” (Glory of God alone!) - தேவ மகிமை மட்டுமே!

பல்வேறு சபைகளிலும் கிறிஸ்தவச் சங்கங்களிலுமிருந்து எனக்குக் கிடைத்த ஏறத்தாழ 40 நாட்காட்டிகளில் ஒன்றுகூட இவ்வாண்டை (2017) திருச்சபைச் சீர்திருத்தத்தின் 500ஆம் ஆண்டு எனக் குறிப்பிடவில்லை. சீர்திருத்த நாளாகிய அக்டோபர் 31ஐக்கூட அவ்விதம் குறிப்பிடவில்லை.

சீர்திருத்தத்தின் மகத்தான சத்தியங்களை நாம் வெகுவாய் மறந்துவிட்டோம் என்றே எண்ணுகிறேன். சபைச் சீர்திருத்தத்தின் வேர்களைப்பற்றி இன்றையத் தலைமுறையினருக்கு எதுவும் தெரியாதிருப்பது ஆச்சரியம் அல்லவே! இந்த 2017ஆம் ஆண்டு நாட்காட்டியைச் சீர்திருத்தத்தின் கருப்பொருளில் வெளியிட்ட ஒரே நிறுவனம் Back to the Bible (சத்திய வசனம்) மட்டுமே.

தனது பெயருக்கேற்ப இயங்கும் இவ்வூழியத்திற்கு எனது பாராட்டுக்கள்! "நமது விசுவாசத்தை வரையறுக்கும் தருணம்" (Defining Moments of our Faith) என்ற தலைப்பில் இந்த ஐந்து முழக்க வாசகங்களுடன் தங்கள் நாட்காட்டியை வெளியிட்டுள்ளனர்.

சீர்திருத்தவாதிகள் சம்பந்தப்பட்ட ஆலயங்கள் அல்லது இடங்களின் படங்கள் ஒவ்வொரு மாதப் பக்கத்திலும் அச்சிடப்பட்டுள்ளன. சீர்திருத்தத்தைத் தொடர்ந்து பல சபைப் பிரிவுகள் தோன்றின. லுத்தரன், பிரஸ்பிட்டேரியன், கான்கிரிகேஷனலிஸ்ட்ஸ், மெதடிஸ்ட், பாப்திஸ்து போன்றவை அவைகளில் சில. பெந்தெகொஸ்தே சபை பின்னர் தோன்றிற்று. ஒவ்வொரு சபைப் பிரிவிற்கும் பலங்களும் பலக் குறைவுகளும் உண்டு. திருமறையின் அனைத்துச் சத்தியங்களையும் பூரணமாய் விளங்கிக் கொண்ட சபைப் பிரிவு எதுவுமில்லை. எனவே பெருமையடிக்க எவருக்கும் இடமில்லை. இச்சபைப் பிரிவுகளுக்கிடையே சிறு சிறு வேறுபாடுகளிருந்தாலும் அடிப்படைச் சத்தியங்களை வரையறுப்பது இந்த ஐந்து முழக்க வாசகங்களே.

திருச்சபைச் சீர்திருத்தத்தின் இம்முக்கிய ஐந்து கோட்பாட்டு முழக்கங்களைத் திருமறையின் வெளிச்சத்தில் அடுத்து வரும் பக்கங்களில் படித்துக் கிறிஸ்தவர்கள் மற்றும் சபைகள் தங்கள் வாழ்க்கையில் அவற்றை அப்பியாசிப்பது எப்படியெனக் கவனிப்போம்.

...தொடரும்

(சகோ. ஸ்டான்லி அவர்கள் எழுதிய ”நான் நிற்கும் கன்மலை” என்ற நூலில் இருந்து...)

**துதிப்போம்:**

1. GODependence ஊழியத்தில் தேவன் தரும் தெளிவான வழிநடத்துதலுக்காக – அவர் அருளிய தரிசனம், பணித்திட்டம், விசுவாசத்துடன் செயல்படும் நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் குழுவிற்காக, மற்றும் அதன் எளிய தொடக்கத்திலிருந்து இன்றுவரையும் தேவனுடைய மாறாத கிருபைக்காக.
2. தற்போது செயல்பாட்டில் இருக்கும் வேதவாசிப்பு சவால் குழுக்களுக்காக; இவை ஆறு வெவ்வேறு கால திட்டங்களில், பத்து மொழிகளிலும் செயல்படுகின்றன, மேலும் இவை ஒவ்வொரு மாதமும் புதிய குழுக்களாக தொடங்கப்படுவதற்காக.
3. சிறுவர் வேதவாசிப்பு சவால் (CBRC) குழுக்களின் இரண்டாம் பருவம் அக்டோபர் 6-ம் தேதி தொடங்கியதற்காக, மகிழ்ச்சியோடு தங்கள் வேதபகுதிகளை வாசிக்கத் தொடங்கிய குழந்தைகளுக்காக.
4. அக்டோபர் 2-ம் தேதி தமிழில் நடைபெற்ற 12-மணி நேரத் தொடர் வேத வாசிப்புத் நிகழ்ச்சியான "பைபிள் ரீடத்தான்" வெற்றிகரமாக நடைபெற்றதற்காக; பல வாசிப்பாளர்கள் இதில் உற்சாகமாக பங்கேற்றதற்காக.
5. ஊக்கமளிக்கும் கணக்கெடுப்பு முடிவுகளுக்காக - GODependence செய்திமடல்கள் வழியாக வாசகர்களின் அர்ப்பணிப்பை ஆழப்படுத்தவும், தேவனுடனான அவர்களின் நடத்தையை வலுப்படுத்தவும் தேவன் பயன்படுத்துகிறார் என்பதை இது காட்டுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிப்போம்:**

**1**. GODependence ஊழியத்தின் மூன்று WhatsApp எண்களுக்கான தேவனுடைய பாதுகாப்பிற்காக ஜெபிப்போம் – அவை spam எனக் குறிக்கப்படாமலும் வாட்சாப்பில் தடைசெய்யப்படாமலும் இருக்க தேவன் கிருபை தர வேண்டும், இதன் மூலம் பத்து மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்கள் தடை இல்லாமல் தொடர.
2. CBRC இரண்டாம் பருவத்தின் வெற்றிக்காக ஜெபிப்போம் – குறிப்பாக வேதப்பகுதிகளை வாசிக்கத் தொடங்கியுள்ள குழந்தைகளுக்காக, தேவன் அவர்களின் முயற்சிகளை ஆசீர்வதித்து, அவர்களுக்கு தெளிவான புரிதலை அளித்து, வலிமையான விசுவாசத்துடன் இந்த பருவத்தை அவர்கள் நிறைவு செய்ய.
3. GODependence செய்திமடலின் சரியான நேரத்தில் வெளியீட்டிற்காகவும், அதில் பங்களிக்கும் எழுத்தாளர்களுக்குத் தேவன் தெய்வீக ஞானமும் படைப்பாற்றலும் வழங்க.
4. வேத தியானக் குழுக்களை மீண்டும் தொடங்குவதற்காக ஜெபிப்போம் – அவற்றை தொடங்குவதில் உள்ள ஒவ்வொரு தடையையும் தேவன் நீக்கி, அவருடைய வார்த்தைக்கான புதிய ஆர்வத்தை எழுப்ப.
5. வரவிருக்கும் டிசம்பர் 16, 2025 – சர்வதேச வேதவாசிப்பு தினத்திற்கான நிகழ்வுகளுக்காக – அனைத்து ஏற்பாடுகளும் சீராக நடைபெற்று, உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு, அந்த நாளை அர்த்தமுள்ளதாகக் கொண்டாட ஜெபிப்போம்.

## சர்வதேச வேதவாசிப்பு தினம் – 16 டிசம்பர்

தேவனுடைய வார்த்தையை அனைவரும் வாசிக்கவும், அறியவும் தக்கதாக அனைவருக்கும் பரிசுத்த வேதாகமத்தை கிடைக்கச் செய்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேவனால் ஏற்படுத்தப்பட்ட சிறுமி மேரி ஜோன்ஸ் அவர்களின் நினைவாக 16 டிசம்பர் 2023 அன்று, முதன்முதலாக "சர்வதேச வேதவாசிப்பு தினத்தை" (International Day of Bible Reading) அனுசரித்தது GODependence குழுவிற்கு கிடைத்த பாக்கியமாகும்.

அந்த நாளில் Zoomல் நடைபெற்ற ஆரம்பவிழா கூடுகையில் நூற்றுக்கணக்கான GODependence வேதவாசிப்பு சவால் குழுக்களின் பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த சர்வதேச வேதவாசிப்பு தினத்தை அனுசரிக்கும்படியாக எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம் உலகம் முழுவதும் இருந்து 5000 க்கும் மேற்பட்டோர் இது குறித்து அறிந்து கொண்டனர்.

டிசம்பர் 16, 2024 அன்று நடைபெற்ற இரண்டாவது சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் (IDBR 2024), மூன்று மொழிகளில் Zoom கூட்டங்களை ஏற்பாடு செய்ய முடிந்தது. மேலும், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் ஒரு மெகா ஆன்லைன் வேத வினாடி வினா மற்றும் தனித்தனியே இரு மொழிகளிலும் 8-மணி நேர ஆன்லைன் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகள் (Bible Readathons) நடத்தப்பட்டன.

மூன்றாவது சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR 2025) டிசம்பர் 16, 2025 அன்று கடைப்பிடிக்கப்படும். இந்த ஆண்டு முதல், டிசம்பர் 16 எந்த நாளில் வருகிறது என்பதைப் பொருட்படுத்தாமல் சர்வதேச வேதவாசிப்பு தின நிகழ்ச்சிகளை எளிதாக நடத்துவதற்காக, இந்த தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒரு சர்வதேச வேதவாசிப்பு வாரமாக (டிசம்பர் 10–16) விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம்.

இந்த வருடம் GODependence வேதவாசிப்பு சவால்கள் நடத்தப்படும் அனைத்து 10 மொழிகளிலும், முடிந்தவரை அதிகமான நாடுகளிலும் IDBR 2025 நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதன் செயல் திட்டம் மற்றும் பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த கூடுதல் விவரங்கள் அடுத்த மாத செய்திமடலில் பகிரப்படும்.

தயவு செய்து IDBR 2025 திட்டங்களுக்காக உங்கள் ஜெபங்களில் தொடர்ந்து நினைவுகொள்ளுங்கள்.



ஒரு நாளின் துவக்கத்தில் நாம் அமைதியாக இருக்கிறோம்; ஏனெனில் தேவனே முதல் வார்த்தையைப் பேசவேண்டும். தூங்கப் போவதற்கு முன் நாம் அமைதியாக இருக்கிறோம்; ஏனெனில் இறுதி வார்த்தையும் கர்த்தருக்கே உரியது ஆகும். - டியட்ரிச் போன்ஹோஃபர்

## 📕 வேதவாசிப்பு சவால்கள் - 01 நவம்பர் 2025 முதல்




"வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், இயேசுவை நோக்கிச் செல்ல வழிகாட்டுகிறது." - சார்லஸ் ஸ்பர்ஜன்.
உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.

**நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👩‍💼 "தினசரி வேதாகமம் வாசிக்கும் ஆசீர்வாதமான ஒழுங்கிற்கு என்னை திருப்பிக் கொண்டு வர இது மிகவும் உதவியாக இருந்தது. சில ஆண்டுகளாக வாசிப்பதில் நான் மிகவும் ஒழுங்கற்ற நிலையில் இருந்தேன். தினசரி வேதப்பகுதிகள், தியானங்கள் மற்றும் ஜெபக் கரிசனைகளுக்காக GODependence குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வாராந்திர வினா-விடை போட்டியும் ஒரு அற்புதமான உந்து சக்தியாக இருந்தது. மிக்க நன்றி!" - Vijila Isac

👨‍💼 "GODependence வேதவாசிப்பு சவாலின் வழிகாட்டுதலின் மூலம், முதல் முறையாக முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்ததற்காக நான் தேவனைத் துதிக்கிறேன்." - Lalmohan Bari

👩‍💼 "நான் இதுவரை முழுமையாக பைபிள் படித்தது இல்லை. முதல் முறையாக முழு பைபிளும் படிக்கும் வாய்ப்பு GODependence வேதவாசிப்புச் சவால்கள் மூலம் கிடைத்தது. முழு வேதாகமத்தையும் படித்து முடித்தது எனக்கு மிகுந்த சந்தோசமாக உள்ளது." - S. Saro Celgrim

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 நவம்பர் 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**.இதன் சிறப்பு அம்சங்கள்:**

✷ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✷ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✷ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு காலஅளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

**https://wa.me/96565962559**

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

**:- GODependence குழு**

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!



ஆள்தத்துவத்தில், கிறிஸ்துவானவர் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறார். எழுத்தில், வேதாகமமானது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. மனிதர்களின் வார்த்தைகளில் இவையிரண்டுமே தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. இவ்விரண்டும் மனித தன்மையும் தெய்வீக தன்மையும் உள்ளவையாக இருக்கின்றன. - பீற்றர் கிரீப்ட்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 12

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**கொடுக்கப்பட்டுள்ள படங்களிலிருந்து கொலோசெயர் வசனங்களை/பட்டணத்தை கண்டறியவும் வசனங்களை கண்டு பிடி**




https://forms.gle/oZoWDa3N4qKTYRnj6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/11/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

JOIN NOW!

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல்
1.2K சந்தாதாரர்களையும்
265 வீடியோக்களையும் எட்டியுள்ளது

CLICK HERE https://youtube.com/@godependencetamil







### ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி

### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.


தமிழ் - +965 6596 2559

ஆங்கிலம் - +91 95255 95265

பிற மொழிகள் - +91 99628 34944

**(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)**

**என் வேண்டுகோள் வெளிப்படையாக நிராகரிக்கப்படுவதை எதிர்கொள்ளும்போது, நான் தேவனுடைய வார்த்தையை நம்பி அவரை கனப்படுத்துவதற்கான வாய்ப்பை தேவன் எனக்குத் தருகிறார். - சார்லஸ் ஸ்பர்ஜன்**




## உங்களுக்குத் தெரியுமா?

**மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதைப் பைபிள் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது!**

இந்நவீன காலத்தில், இந்த அறிவு 1948–53 காலத்தில் உலக சுகாதார அமைப்பின் (WHO) முதல் தலைமை இயக்குநராக இருந்த டாக்டர் பிராக் சிசோம் அவர்களுக்கே வழங்கப்பட்டது. அவர் ஒரு மனநல மருத்துவ நிபுணர்; மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் நெருக்கமாக இணைந்தவை என்று நம்பினார்.
அவர் புகழ்பெற்ற ஒரு கூற்றை கூறினார்:
“மன ஆரோக்கியம் இல்லாமல் உண்மையான உடல் ஆரோக்கியம் இருக்க முடியாது.”
ஆனால் ஆச்சரியம் என்னவெனில், இந்த உண்மையை பைபிள் கிறி.மு. 9ஆம் நூற்றாண்டிலேயே வெளிப்படுத்தியது!

"மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.” (நீதிமொழிகள் 17:22, பைபிள்)

உங்கள் உடலையும் மனதையும் படைத்த படைப்பாளரிடமிருந்து கற்க ஆவலாக உள்ளீர்களா? பைபிளை வாசியுங்கள்.







---

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 11 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 11 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

**வேதப்பகுதி: பிலிப்பியர்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 11

➡️ இடமிருந்து வலம்
1. கிருபை(1:7)
4. சரீரம் (3:21)
6. ஆதாயம் (1:21)
7. தீமோத்தேயு (2:19,20)

⬅️ வலமிருந்து இடம்
2. சுயநீதி(3:9)
3. பென்யமீன் (3:5)
5. கர்த்தர் (4:5)
6. ஆத்துமா (2:2)
8. பிலிப்பியர் (4:15)

⬇️மேலிருந்து கீழ்
1. கிறிஸ்து (1:21)
2. சுவிசேஷம் (1:12)

**சரியான பதில்களை அனுப்பிய 11 நபர்கள்:**
- ஜீவராஜ்
- Sharon Rose
- R Josephine
- D. Renuka
- அ.ஜாய்ஸ் செல்லதுரை
- Jance.J
- Jinisha
- Raichel Amuthavalli
- கிறிஸ்டி ஜோசப்
- P. Vijila
- மணி மாலா ச.

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 11

**கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கொண்டு பிலிப்பியர் வரும் வசனங்களை கண்டுபிடி.**

1) பிலிப்பியர் 2:14
2) பிலிப்பியர் 2:4
3)பிலிப்பியர் 1:21
4)பிலிப்பியர் 4:4
5)பிலிப்பியர் 4:6
6) பிலிப்பியர் 4:8
7) பிலிப்பியர் 4:13
8) பிலிப்பியர் 2:2
9) பிலிப்பியர் 4:3
10)பிலிப்பியர் 1:1

**சரியான பதில்களை அனுப்பிய 2 நபர்களின் பெயர்கள் :**
- Vijila
- கிறிஸ்டி ஜோசப்

தேவனுடைய வார்த்தையை வாசித்து, தேவனுடைய வார்த்தையை அறிந்து, மற்றும் அதன் உண்மைகளுக்கு ஆதரவாக பேசுமளவிற்கு அதை நேசிப்பதில் இருந்து வேதாகம பகுத்தறியும் அறிவுடையவர்களாக இருப்பது துவங்குகிறது. - கார்ல் ஜோசுவா

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

30 செப்டம்பர் 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்



















தேவனுடைய வார்த்தையில் மகிழ்ச்சியாக இருப்பது என்பது தேவனில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு நம்மை வழிநடத்துகிறது. தேவனில் மகிழ்ச்சியாயிருப்பது பயத்தை புறம்பேத் தள்ளுகிறது. - டேவிட் எரேமியா

# “பேரழிவைத் தடுத்த ஒரு ஞானமுள்ள பெண்”

**1 சாமுவேல் 25**

தாவீதும் அவருடைய ஆட்களும் வனாந்தரத்தில் நாபாலின் மேய்ப்பர்களையும் மந்தைகளையும் பாதுகாத்தனர். பின்னர் தாவீது சில உணவுப் பொருட்களைக் கேட்டபோது, நாபால் அதை மறுத்து தாவீதை அவமதித்தான். கோபமடைந்த தாவீது, தன் ஆட்களுடன் நாபாலின் வீட்டை அழிக்கப் புறப்பட்டார்.

அபிகாயில் இதைக் கேள்விப்பட்டபோது, தாவீதுக்கும் அவருடைய ஆட்களுக்கும் தாராளமாக உணவுப் பொருட்களைக் கொடுத்து விரைவாகவும் ஞானமாகவும் செயல்பட்டாள். அவள் நாபாலுக்குச் சொல்லாமல் தாவீதிடம் சென்று, கருணைக்காக மன்றாடி, தன் கணவரின் முட்டாள்தனத்தை ஒப்புக்கொண்டாள். தாவீது பழிவாங்காமல், தேவனை நம்பி தனது போர்களில் ஈடுபடும்படி அவள் கேட்டுக் கொண்டாள்.

அவளுடைய வார்த்தைகளும் நடத்தையும் தாவீதின் கோபத்தைத் தணித்தன, அவளுடைய விவேகத்திற்காக அவர் அவளை ஆசீர்வதித்தார். பின்னர், நடந்ததை நாபால் கேள்விப்பட்டபோது, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு பத்து நாட்களுக்குப் பிறகு இறந்தார். பின்னர் தாவீது அபிகாயிலை வரவழைத்தார், அவள் தாவீதின் மனைவியானாள்.

### அபிகாயிலிடமிருந்து நாம் பின்பற்றக்கூடிய எடுத்துக்காட்டுகள்

**ஞானமும் பகுத்தறிவும் கொண்டவள்** – அவள் விரைவான, தெய்வீக நியாயத்தீர்ப்புடன் செயல்பட்டாள் (1 சாமு. 25:33).

**பணிவு** - அவள் தன் மீது பழியை ஏற்றுக்கொண்டு மரியாதையுடன் தாவீதை அணுகினாள்.

**சமாதானம் செய்பவள்** – சாதுர்யமான வார்த்தைகள் மற்றும் தாராளமான செயல்கள் மூலம் அவள் இரத்தஞ்சிந்துதலைத் தடுத்தாள்.

**தைரியமானவள்** – கோபமான போர்வீரனைச் சந்திக்க அவள் தன் உயிரைப் பணயம் வைத்தாள்.

**விசுவாசம் நிறைந்தவள்** – தாவீது ராஜாவாவதற்கு முன்பே, அவருடைய வாழ்க்கையில் தேவனின் கரம் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

### அபிகாயிலிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை

**1.ம**றுதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும் (நீதிமொழிகள் 15:1).

2. ஞானமும் பணிவும் பேரழிவைத் தடுக்கலாம்.

3. கடினமான உறவுகளிலும் நீதியுடன் செயல்படுபவர்களை கடவுள் மதிக்கிறார்.

உண்மையான பலம் ஆக்கிரமிப்பு மூலம் அல்ல, கிருபையால் காட்டப்படுகிறது.

*மோதல்கள் நிறைந்த உலகில், அபிகாயிலைப் போல சமாதானம் செய்பவர்களாக இருப்போம்.*

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 12

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ↓1→ | | 2→ | | | | |
| | ↓3→ | | | | | |
| | | 4↓ | | | | |
| | | | 5↑ | | 6↑ | |
| | ↓7 | | | 8↑ | 9← | 10↑ |
| | | | | 11← | 12↓ | 13↓ |
| | | 14→ | | | | |

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

### வேதப்பகுதி: கொலோசெயர்

**➡️ இடமிருந்து வலம்**

1. இருதயங்களை ஆளக்கடவது (7)
2. இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தால் உண்டாக்கியது (5)
3. பூரண சற்குணத்தின் கட்டு (3)
14. இயேசு ____யின்மேல் வெற்றிச் சிறந்தார் (3)

**⬅️ வலமிருந்து இடம்**

9. பவுலுக்கு கர்த்தருக்குள் உடன் வேலையாள் (4)
11. கிருபை பொருந்தினதாயிருக்க வேண்டியது உங்கள் ____ (4)

**⬇️ மேலிருந்து கீழ்**

1. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் வருவது (7)
3. கிறிஸ்துவுக்குள் இருக்கிற பொக்கிஷங்களில் ஒன்று (3)
4. பர்னபாவுக்கு இனத்தான் (3)
7. ____வின் வீட்டில் சபை கூடுகிறது (3)
12. இயேசு நமக்கெதிரான கையெழுத்தை சிலுவையின் மேல் ____யடித்தார் (2)
13. சகலவித நற்கிரியைகளுமாகிய ___ (2)

**⬆️ கீழிருந்து மேல்**

5. கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்கு உண்டானது பாவமன்னிப்பாகிய ____ (3)
6. வைத்தியன் (3)
8. எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறவர் (4)
10. லவோதேக்கியாவிலிருக்கிறவர்களுக்காகவும் பவுலுக்கு உண்டு (5)

CLICK HERE https://forms.gle/zVu8SUnjxdA9RBPJ9

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/11/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**பரிசுத்த வேதாகமமானது சிறைச்சாலையான இவ்வுலகில் உள்ள ஒரு ஜன்னல் ஆகும். அதின் வழியாக நாம் நித்தியத்தைக் காண முடியும். - தீமோத்தேயு**

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

ஆரோக்கியமான அருட்செய்தி தேவனுடைய வார்த்தை மீதான அன்பு மற்றும் மக்கள் மீதான அன்பு என்ற இரண்டு அன்புகளில் இருந்துதான் வருகிறது. இவ்விரண்டு அன்பில் இருந்துதான் ஜனங்களுக்கு தேவனுடைய மகிமையான கிருபையைக் காண்பிக்கவேண்டும் என்ற விருப்பம் உண்டாகிறது. - தீமோத்தேயு கெல்லர்

- சகோதரி. பியூலா ஏனோக்.

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

இயேசு கிறிஸ்துவின் ஈடு இணை இல்லா நாமத்தில் வாழ்த்துகள். எனக்கு கிடைத்த இந்த வாய்ப்பிற்காக நன்றி. எனது பெயர் பியூலா ஏனோக். என் தகப்பனார் கோவையில் வேலை பார்த்ததால் நாங்கள் கோவையில் இருந்தோம். அருமையான கிறிஸ்தவ பெற்றோர்களால் வளர்க்கப்பட்டோம். என் திருமணம் 1971 இல் நடந்த பின் நான் வள்ளியூருக்கு வந்தேன் . என் கணவர் அங்கு கவர்மெண்ட் ஹை ஸ்கூலில் வேலை பார்த்தார். எனக்கு நான்கு பிள்ளைகள். (ஒரு பெண் + மூன்று பையன்கள் ).

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்? அவற்றுள் GODependence வேதவாசிப்பு மூலமாக எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்?**

சிறுவயதிலிருந்தே வேதம் வாசிப்பது வழக்கமாக, பழக்கமாக இருந்தபடியால் எவ்வளவு தரம் வாசித்தேன் என்று என்னால் கணக்கிட முடியாது. சிறுவயதில் பாலியர் நேசன் என்ற புத்தகத்தை வேதவாசிப்புக்கு பயன்படுத்தினோம். பின்பு வேதவாசிப்பில் ஆர்வம் ஏற்பட்டு வாசித்துக் கொண்டே இருக்கிற பழக்கம் ஏற்பட்டது. அது ஒரு இனிமையான அனுபவம் . என்னுடைய முப்பது வயதுக்கு மேல் நான் எவ்ரிடே வித் ஜீசஸ் என்கிற டெய்லி ரீடிங் வாசித்தேன். எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று Selwyn Hughes எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர். 2006 இல் நாங்கள் பிள்ளைகளுக்கு உதவியாக இருக்க மெட்ராஸ் வந்தோம். 2017 இல் இருந்து நான் மிகவும் பலவீனப்பட்டேன். நடக்க மிகவும் கஷ்டம். வாசிப்பது கடினம் .ஆடியோ பைபிள் தான் வாசித்துக் கொண்டிருந்தேன். அப்போது தான் 2019 இல் என் சினேகிதி எனக்கு இந்த வேத வாசிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள்

**GODependence குழுவின் நடைமுறைகள் எந்த விதத்தில் உங்களுக்கு உதவின?**

எனக்கு நம்பிக்கை இல்லாமல் ஆரம்பித்தேன். 2019 இல் ஜூலை மாதம் என்று நினைக்கிறேன். சரியாக ஞாபகம் இல்லை .ஒரு வருட திட்டத்தில் சேர்ந்தேன் .அது முடிந்தவுடன் ஆறு மாத திட்டத்தில் சேர்ந்தேன். அதன்பின்பு மூன்று மாதம், இரண்டு தரம் பின்பு ஆறு மாதம் இப்படி மாறி மாறி தான் நான் எடுத்துக் கொண்டேன். இந்த வருடமும் ஆறு மாதம், பின்பு மூன்று மாதம் இப்பொழுது மூன்று மாதம் படித்துக் கொண்டிருக்கிறேன் எனக்கு சரியாக அது நினைவுக்கு கொண்டு வர முடியவில்லை.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது பெற்றுக்கொண்ட நன்மைகள் என்ன?**

நான் மிகவும் பலவீனமாக இருந்துதான் இந்த திட்டத்தில் சேர்ந்தேன் ஆனால் வேதவசனம் எனக்குள் ஆரோக்கியத்தை கொடுத்தது பிள்ளைகள் வருவார்கள் போவார்கள். ஆனாலும் இரவு ஆகிலும் நான் படித்து முடிக்காமல் படுக்க மாட்டேன்.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

கொரோனா சமயத்தில் 2020 இல் நான் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனேன். நான்கு நாட்கள் அங்கு இருந்தேன். என்னால் வேதம் வாசிக்க முடியாது. எப்போதும் மயக்கம் தான் ஆனாலும் நான் வீட்டிற்கு வந்தவுடன் எல்லா வேத பகுதியையும் படித்து முடித்தேன். அப்பொழுது நற்செய்தி நூல் யோவான் என நினைக்கிறேன் தியானம் செய்து கொண்டிருந்தோம் அந்தக் கேள்வி பதில்களையும் முடித்து ஞாயிற்றுக்கிழமைக்குள் எல்லாவற்றையும் முடிக்க தேவன் உதவி செய்தார். அது ஒரு அற்புதமான அனுபவம் இப்போதும் எனக்கு 77 வயதாகிறது 78 நவம்பர் ஒன்றாம் தேதி முடியும் அடிக்கடி பலவீனம் சுகவீனம் இருந்தாலும் என் வேதவாசிப்பு இதுவரை தடைபடவில்லை. கர்த்தருக்கே மகிமை எனக்கே ஆச்சரியம்! எப்படியும் 16 தடவைக்கு மேல் வாசித்து முடித்திருப்பேன். ஆனாலும் என் தாகம் தீரவில்லை. அற்புதமான சுகத்தையும் ஆரோக்கியத்தையும் வாசிக்கும் திறனையும் பெற்றிருக்கிறேன். கர்த்தருக்கு சித்தமானால் 2026 இல் இரண்டு மாதத்தில் முடிக்கும் திட்டத்தில் சேர ஆயத்தமாக இருக்கிறேன். எனக்குள் அற்புத மாற்றங்களை நான் உணர்ந்தேன் .

**இறுதியாக, நீங்கள் ஒரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

வேத வாசிப்பு அது வெறும் கிரியை அல்ல அது விசுவாசத்தை வளர்க்கும் அற்புத மருந்து .வேதத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் அதன் ஆசீர்வாதத்தையும் நன்மையையும் பெறாமல் போகமாட்டார்கள். நிச்சயமாக ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னை தொடரும் . ஆமென்.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

**வேதமும் நானும்;வேதத்தோடு இருக்கிற அனுபவமும், எனக்குள் மாற்றத்தை ஏற்படுத்தினது** PR. K. PAUL MANOHARAN

**கையிடும் வேலை ஆசிர்வதிக்கப்பட கையிலே வேதாகமம் எடுத்து வாசித்தேன் .** JAYAMARY VIJAY KUMAR



**நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழ விரும்பவில்லை என்றால், அவருடைய வார்த்தையைப் படிப்பதையும் கேட்பதையும் விட்டுவிட்டு, அதைப் பிசாசுக்குக் கொடுத்து விடலாம். - மார்ட்டின் லூத்தர்**

# கொலோசெயர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 60- கி.பி. 62
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 60
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

• வேதாகமத்தில் கிறிஸ்தியல் விளக்கம் மிகுதியாய்க் கொண்ட நூல் கொலோசெயர் கடிதமாகும். கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்தவர்களாக வாழ இயலாது என இக்கடிதம் வலியுறுத்திக்கூறுகிறது.

## சூழலும் நோக்கமும்

• கோட்பாட்டுப் பிழையைப் பற்றி விசுவாசிகளை எச்சரிக்கவும், கிறிஸ்துவில் தொடர்ந்து வளர அவர்களைத் தூண்டவும் பவுல் கொலோசெயர்களுக்கு எழுதினார். கொலோசெயர் புத்தகத்தின் முதல் பாதி, புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரு இறையியல் கட்டுரையாகும். இரண்டாவது பாதியானது ஒரு சிறு நெறிமுறைகள் கொண்ட பாடமாகும், இது கிறிஸ்தவ வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் குறிப்பிடுகிறது. பவுல் தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து வீடு மற்றும் குடும்பத்திற்கும், வேலையிலிருந்து நாம் மற்றவர்களை நடத்தும் விதத்திற்கும் முன்னேறுகிறார். இந்த புத்தகத்தின் கருப்பொருள் இயேசு கிறிஸ்துவின் இறையாட்சி ஆகும். சின்ன ஆசியாவிலிருந்த கொலோசை நகரத்தில் பவுல் நேரடியாக நற்செய்திப் பணி ஆற்றவில்லை; ஆனால் எபேசு நகரில் அவர் தங்கியிருந்த போது எப்பப்பிரா மூலமாகக் கொலோசையில் நற்செய்தி அறிவித்தார் (1: 7-8). இந்நகரில் ஞான உணர்வுக் கொள்கையின் தொடக்க வடிவமும் யூதச் சிந்தனைகளும் இணைந்த சில கொள்கைகள் பரவிக் கிடந்தன. சடங்கு விதிகளுக்கு முக்கியத்துவம் தருதல் (2:16-17; 3:11), உடல் ஒறுத்தல் (2:21,23), தேவதூதர் வழிபாடு (2:18; 2:2-3), மனித ஞானத்திலும் மரபிலும் மிகுந்த நம்பிக்கை வைத்தல் (2:4,8) போன்றவை இக்கொள்கையில் விரவிக் கிடந்தன. இந்நிலையைக் கணடித்துக் கிறிஸதவ உண்மையை நிலைநிறுத்த இக்கடிதம் எழுதப்பட்டது. சிறையிலிருந்து எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டிருப்பதால் இது சிறைக்கூட கடிதங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. கி.பி. 70-80 ஆண்டுகளில் இது எழுதப்பட்டது.

## முக்கிய வசனங்கள்

கொலோ1:15-16, கொலோ 2:8, கொலோ 3:12-13, கொலோ4:5-6

## புத்தகத்தின் சுருக்கம்

• திருச்சபையின் இருப்புக்கு ஆபத்தை ஏற்படுத்திய கொலோசேவில் எழுந்த மதவெறியைத் தோற்கடிக்க கொலோசெயர் வெளிப்படையாக எழுதப்பட்டது. பவுலுக்கு என்ன சொல்லப்பட்டது என்று நமக்குத் தெரியாத நிலையில், இந்தக் கடிதம் அவருடைய பதில் என்பதை, கிறிஸ்துவைப் பற்றிய குறைபாடுள்ள பார்வைக்கான (அவரது உண்மையான மனிதநேயத்தை மறுத்து, அவருடைய முழு தெய்வத்துவத்தை ஏற்கவில்லை) பவுலின் பதிலின் அடிப்படையில் அதை நாம் ஊகிக்க முடியும். விருத்தசேதனம் மற்றும் மரபுகள் (கொலோ 2:8-11; 3:11) ஆகியவற்றை "யூதர்கள்" வலியுறுத்துவதையும் பவுல் மறுக்கிறார். குறிப்பிடப்பட்ட மதவெறி ஒரு யூத-ஞானவாதமாகவோ அல்லது யூத துறவறம் மற்றும் கிரேக்கத் தத்துவத்தின் கலவையாகவோ தோன்றுகிறது. கிறிஸ்துவின் நிறைவைச் சுட்டிக்காட்டுவதில் பவுல் ஒரு குறிப்பிடத்தக்க வேலையைச் செய்கிறார். கொலோசெயர் புத்தகத்தில் கிறிஸ்துவின் தெய்வத்துவம் மற்றும் அவர் பற்றிய தவறான தத்துவங்கள் (1:15-2:23), அத்துடன் கிறிஸ்தவ நடத்தை பற்றிய நடைமுறை அறிவுரைகள் (3:1-4:18) பற்றிய கோட்பாடுகள் உள்ளன. கொலோசையில் இருந்த போலிப்போதகர்களின் தவறான கொள்கைகளைக் கண்டிப்பதற்காக இக்கடிதஆசிரியர் கிறிஸ்துவைத் தேவனது சாயல் (1:15); அவர் அனைத்தையும் படைத்தவர் (1:16); அனைத்துக்கும் முந்திய அவர், அனைத்தையும் நிலைக்கச் செய்பவர் (1:17). இக்கடிதத்தின்படி கிறிஸ்து திருச்சபையின் தலைவர் (1:18), இறந்து உயிர்த்தெழுவோருள் தலைப்பேறு (1:18), தேவனின் தன்மையை மனித உருவில் நிறைவாய்க் கொண்டவர் (1:19;2:9), தேவனோடு நம்மை மீண்டும் ஒப்புரவாக்குபவர் (1:20-22) என்று குறிப்பிடுகிறார். முதற்பகுதியில் (1-2) கிறிஸ்துவின் தன்மையை எடுத்துக்காட்டிய பவுல், இரண்டாம் பகுதியில் இப்போதனை கிறிஸ்தவர்களின் வாழ்வில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என விளக்குகிறார் (3;-4). கிறிஸ்தவர்கள் பழையதை களைந்து புதிய இயல்பை அணிந்து கொள்ள வேண்டும்; குடும்ப வாழ்விலும்,தொழிலிலும், பொது வாழ்விலும் பரிசுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும் என அவர் அறிவுறுத்துகிறார்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

• அனைத்து ஆரம்பகால திருச்சபைகளைப் போலவே, கொலோசெயில் யூத நியாயப்பிரமாணப் பிரச்சினை பவுலுக்கு மிகுந்த கவலையாக இருந்தது. கிரியைகளைத் தவிர்த்து கிருபையினால் இரட்சிப்பு என்ற கருத்து மிகவும் தீவிரமானது, அதை பழைய ஏற்பாட்டு சட்டத்தில் மூழ்கியவர்கள் புரிந்துகொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இதன் விளைவாக, இந்த புதிய நம்பிக்கைக்கு நியாயப்பிரமாணத்திலிருந்து சில தேவைகளைச் சேர்க்க நியாயப்பிரமாணவாதிகள் முயன்றனர். அவற்றில் முதன்மையானது விருத்தசேதனத்தின் தேவை, இது இன்னும் சில யூத மதம் மாறியவர்களிடையே நடைமுறையில் இருந்தது. கொலோ 2:11-15 ல் பவுல் இந்த பிழையை எதிர்த்தார், அதில் கிறிஸ்து வந்ததால் மாம்சத்தின் விருத்தசேதனம் இனி தேவையில்லை என்று அவர் அறிவித்தார். அவருடையது இதயத்தின் விருத்தசேதனம், மாம்சத்தை அல்ல, பழைய ஏற்பாட்டு சட்டத்தின் சடங்கு சடங்குகள் இனி தேவையில்லை (உபாகமம் 10:16, 30:6; எரேமியா 4:4, 9:26; அப்போஸ்தலர் 7:51; ரோமர் 2 :29) என உறுதியாகக் கூறினார்.

## நடைமுறைப் பயன்பாடு

• பவுல் பல பகுதிகளை எடுத்துரைத்தாலும், நமது இரட்சிப்பு மற்றும் நமது பரிசுத்தமாக்குதலுக்காக நமது வாழ்வில் கிறிஸ்துவின் முழுமையான கிரியை இன்று நமக்கான அடிப்படைப் பயன்பாடாக உள்ளது. நுட்பமான நியாயப்பிரமாண சட்டங்கள் மற்றும் மதங்களுக்கு எதிரான கொள்கைகளால் வழிதவறாமல் இருக்க, நாம் சுவிசேஷத்தை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும். இறைவனாகவும் இரட்சகராகவும் கிறிஸ்துவின் மையத்தன்மையைக் குறைக்கும் எந்தவொரு விலகலுக்கும் நாம் கவனமாக இருக்க வேண்டும். வேதாகமத்தின் அதே அதிகாரத்தைக் கூறும் புத்தகங்களைப் பயன்படுத்தி, அல்லது இரட்சிப்பில் தெய்வீக சாதனையுடன் மனித முயற்சியை இணைக்கும் எந்த ஒரு "மதமும்" தன்னை உண்மையுடன் சமன்படுத்த முயற்சிக்கிறது. மற்ற மதங்களை கிறிஸ்துவத்துடன் இணைக்கவோ அல்லது சேர்க்கவோ முடியாது. கிறிஸ்தவம் என்பது ஒரு குடும்பம், ஒரு வாழ்க்கை முறை மற்றும் ஒரு உறவு - ஒரு மதம் அல்ல. நற்செயல்கள், ஜோதிடம், அமானுஷ்யம், ஜாதகம் ஆகியவை தேவனின் வழிகளைக் காட்டுவதில்லை. அதை கிறிஸ்து மட்டுமே செய்கிறார். அவருடைய விருப்பம் அவருடைய வார்த்தையில் வெளிப்படுகிறது, அவருடைய அன்பின் கடிதம் நமக்கு உள்ளது ; நாம் அதை தெரிந்து கொள்ள வேண்டும்!

## நூலின் அமைப்பு

1) ) முன்னுரை 1:1 - 11 (வாழ்த்தும், நன்றியும் ஜெபமும்)
2) பவுலின் தன்னிலை விளக்கம் 1:12 - 26
3) கிறிஸ்தவ வாழ்வு 1:27 - 2:18
4) திமோத்தேயு, எப்பப்பிராதித்து குறித்த திட்டம் 2:19 - 30
5) எதிரிகள் குறித்து எச்சரிக்கை 3:1 - 4:9
6) பவுலும் பிலிப்பிய நண்பர்களும் 4:10 - 20
7) முடிவுரை 4:21 - 23

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின்வாங்குவதில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன். - யோபு 23:12

நமது GODependence செய்திமடல் பற்றிய சமீபத்திய கருத்துக்கணிப்பின் ஊக்கமளிக்கும் முடிவுகளைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். 34 நபர்களிடமிருந்து கிடைத்த கணிசமான பதில்கள், நமது வாசகர்களின் ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பைக் காட்டுவதுடன், இதன் உள்ளடக்கம் ஆவிக்குரிய வாழ்க்கையை அதிகம் பாதித்து வேத வாசிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதை உறுதிப்படுத்துகின்றன. மதிப்புமிக்க கருத்துகளைத் தெரிவிப்பதற்காக தங்களின் நேரத்தை ஒதுக்கியதற்கு நன்றி.

## ஈடுபாடு மற்றும் தாக்கம் குறித்த முக்கிய குறிப்புகள்

**இந்த கருத்துக்கணிப்பு, வாசகர்களின் அதிக அளவிலான வாசிப்பு, ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் ஒட்டுமொத்த திருப்தியை வெளிப்படுத்தியது:**

- தொடர்ச்சியான வாசிப்பு: வாசகர்களில் பெரும்பான்மையானோர், 61.8%, GODependence செய்திமடலை ஒவ்வொரு மாதமும் வாசிப்பதாக தெரிவித்துள்ளனர்.

- ஆழ்ந்த ஈடுபாடு: வாசகர்கள் இதன் உள்ளடக்கத்தில் கணிசமான நேரத்தை செலவிடுகிறார்கள். பாதிக்கும் மேற்பட்டோர் (52.9%) ஒவ்வொரு இதழையும் வாசிக்க 15 நிமிடங்களுக்கும் மேலாக செலவிடுகிறார்கள், மேலும் 26.5% பேர் 10-15 நிமிடங்கள் செலவிடுகிறார்கள். இது செய்திமடல் வெறுமனே விரைவாக படிக்கப்படாமல், முழுமையாக உள்வாங்கப்படுவதை இது காட்டுகிறது.

- அதிக உதவியான தரமதிப்பீடு: செய்திமடலின் ஆவிக்குரிய தாக்கம் தெளிவாகிறது: 85.3% பதிலளித்தவர்கள், தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது வேதவாசிப்புப் பழக்கங்களில் செய்திமடலை "மிகவும் உதவியாக" இருப்பதாக காண்கிறார்கள். ஒட்டுமொத்தமாக, 94.1% பேர் செய்திமடலை "மிகவும் உதவியாக" அல்லது "ஓரளவுக்கு உதவியாக" இருப்பதாக மதிப்பிட்டுள்ளனர்.

- கலைநயமான வடிவமைப்பு: இதன் தளவமைப்பு மற்றும் வடிவமைப்பு அதிகம் பாராட்டப்பட்டுள்ளது. 91.2% பேர் செய்திமடலை "மிகவும் கவர்ச்சியாக" (44.1%) அல்லது " எளிமையாக ஆனால் நன்றாக " (47.1%) எனக் கூறியுள்ளனர்.

- ஆசீர்வாதத்தைப் பகிர்தல்: செய்திமடல் உற்சாகமாக பகிரப்படுகிறது! 70.5% பதிலளித்தவர்கள் செய்திமடலை அவ்வப்போது (52.9%) அல்லது ஒழுங்காக (17.6%) பகிர்கிறார்கள்.

- எதிர்கால பங்களிப்புகள்: பல வாசகர்கள் செய்திமடலில் பங்களிக்க ஆர்வம் தெரிவித்தனர். 58.8% பேர் உள்ளடக்கத்தில் பங்களிக்க விரும்புவதாகக் கூறினர்; 20.6% பேர் ஆம் என்றனர், 38.2% பேர் ஒருவேளை, வரும் நாட்களில் இருக்கலாம் என்றனர்.



கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தச் சொற்களாயிருக்கின்றன. - சங்கீதம் 12:6

(தொடர்ச்சி....)

**எந்த உள்ளடக்கம் அதிக இணைப்பை ஏற்படுத்துகிறது? வாழ்வளிக்கும் வார்த்தைகள்:**

எந்தப் பிரிவுகள் மிகவும் பாராட்டப்படுகின்றன மற்றும் அதிகம் ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றிய பின்னூட்டம் உறுதிப்படுத்தப்பட்டது. அதிகம் விரும்பப்பட்ட முதல் ஆறு பிரிவுகள்:

1. வேதவாசிப்பு சவால் குறித்த தகவல்கள் (அதிக ஈடுபாடு).
2. வேத கதாபாத்திரங்களிலிருந்து பாடங்கள்
3. சாட்சிகள்
4. விளையாடுவோம் வேதாகம விளையாட்டு / வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் (பதில்களை எழுதுவதற்கு வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்களை print எடுத்து பயன்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது).
5. துதி & ஜெபக் குறிப்புக்கள்
6. கட்டுரைகள் / தியானங்கள்

**தனிப்பட்ட தாக்கம் மற்றும் ஊக்கம்**

குறிப்பிட்ட உள்ளடக்கம் தனிப்பட்ட முறையில் எவ்வாறு தங்களை பாதித்துள்ளது என பல வாசகர்கள் பகிர்ந்து கொண்டனர். அதில் **சாட்சிகள்** ஊக்கமளிப்பதாக அடிக்கடி குறிப்பிடப்பட்டன. சாட்சிகள் மற்றும் உற்சாகமான **ஜெபக்குறிப்புகள்** அவர்களை ஊக்குவித்து, மற்றவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி அறிய உதவியுள்ளதாக வாசகர்கள் குறிப்பிட்டனர். ஒரு வாசகர், தங்கள் வேத வாசிப்பை முதல் முறையாக முடிக்கும் நிலைக்கு வரும் மகிழ்ச்சியைக் குறிப்பாகக் குறிப்பிட்டு, இந்த முன்னேற்றத்தில் ஒரு பகுதியாக செய்திமடலின் ஆதரவு பங்களித்ததாக தெரிவித்தார்.

**முன்னோக்கிப் பார்த்தல்: மேம்பாட்டுக்கான பரிந்துரைகள்**

எதிர்கால இதழ்களுக்கான உங்களின் பரிந்துரைகளை நாங்கள் மதிக்கிறோம். தற்போதைய வடிவம் "சரியானது" அல்லது "மிகவும் நல்லது" என பலர் கூறியபோதிலும், முக்கிய பரிந்துரைகளில் பின்வருவன அடங்கும்:

- படங்களின் தெளிவை மேம்படுத்துதல்.
- தொழில்சார்ந்த வடிவமைப்பாளர்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு.
- உள்ளடக்கம் சுருக்கமாக இருப்பதை உறுதிசெய்தல்.
- மிஷனரி சுயசரிதைகள், நிறைவேறிய ஜெபங்கள் குறித்த கட்டுரைகள், விரிவான வேதபாடத் தலைப்புகள், குறுஞ்செய்திகள், மற்றும் குறிப்பாக இளைஞர்கள்/மாணவர்களை ஊக்குவிக்க கவனம் செலுத்தும் உள்ளடக்கம் போன்ற புதிய அம்சங்களுக்கான கோரிக்கைகள்.

GODependence செய்திமடலில் நீங்கள் தற்போது அனுபவிக்கும் பல்வகையான, நுண்ணறிவுள்ள மற்றும் கவர்ச்சிகரமான உள்ளடக்கத்தை பராமரிக்கும் அதே நேரத்தில், உங்களுக்கு சிறப்பாக சேவை செய்யும் வித்தில் இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த ஆசிரியர் குழு உறுதிபூண்டுள்ளது. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**எவ்வளவு அதிகமாக வார்த்தையை அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாக அது நம்முடைய நவீன மற்றும் தற்கால பிரச்சனைகளை கையாள்வதை கண்டுபிடிப்போம். - மார்ட்டின் லியாட் ஜோன்ஸ்**

வனுடைய வார்த்தையை அனைவரும் வாசிக்கவும், அறியவும் தக்கதாக அனைவருக்கும் பரிசுத்த வேதாகமத்தை கிடைக்கச் செய்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேவனால் ஏற்படுத்தப்பட்ட சிறுமி மேரி ஜோன்ஸ் அவர்களின் நினைவாக 16 டிசம்பர் 2023 அன்று, முதன்முதலாக "சர்வதேச வேதவாசிப்பு தினத்தை" (International Day of Bible Reading) அனுசரித்தது GODependence குழுவிற்கு கிடைத்த பாக்கியமாகும்.

இந்த மூன்றாவது சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR 2025) டிசம்பர் 16, 2025 அன்று கடைப்பிடிக்கப்படும். இந்த ஆண்டு முதல், டிசம்பர் 16 எந்த நாளில் வருகிறது என்பதைப் பொருட்படுத்தாமல் சர்வதேச வேதவாசிப்பு தின நிகழ்ச்சிகளை எளிதாக நடத்துவதற்காக, இந்த தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒரு சர்வதேச வேதவாசிப்பு வாரமாக (டிசம்பர் 10–16) விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம். இந்த வருடம் GODependence வேதவாசிப்பு சவால்கள் நடத்தப்படும் அனைத்து 10 மொழிகளிலும், முடிந்தவரை அதிகமான நாடுகளிலும் IDBR 2025 நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

**கடந்த வருட அனுபவங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவைகளை 16 டிசம்பர் அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்திற்கான செயல்படுகளாக நாங்கள் பரிந்துரைக்கிறோம்.**

### ஒரு தனிநபராக நான் சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் எப்படி கலந்து கொள்ளலாம்?

- டிசம்பர் 16 அன்று சற்று நேரம் ஒதுக்கி வேதவசனங்களை வாசிக்க, தியானிக்க அதிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கைக்கு குறிப்பெடுக்க, அதற்கு உங்களை அர்ப்பணிக்க நேரம் செலவழிக்கலாம்.
- ஏதாவது ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தை அல்லது வேத பகுதியை மனனம் செய்யலாம்.
- இதனை போட்டோ எடுத்து, உங்கள் WhatsApp Status, Facebook (முகநூல்), இன்ஸ்டாகிராம் போன்றவைகளில் பகிரலாம்.
- *நீங்கள் மனப்பாடம் செய்யும் வசனங்களை வீடியோவாக ஒப்புவிப்பதையும் அவ்விதமே நீங்கள் உங்கள் சமூகவலைத் தளங்களில் பகிரலாம்.
- உங்கள் நட்பு வட்டாரத்தில் தேவைப்படும் யாருக்காவது பரிசுத்த வேதாகமத்தை பரிசளிக்கலாம்.
- அவற்றை அவ்விதம் சமூக வலைத் தளங்களில் பகிரும் போது #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2025 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.
- இதன் மூலம் உங்கள் நட்பு வட்டத்தில் இருக்கும் அனைவருக்கும் இது குறித்து விவரங்கள் தெரியவரும்.

### குடும்பம், சபை மற்றும் குழுக்களாக இதனை நாம் அனுசரிக்க, 16 டிசம்பர் அன்று நாம் என்ன செய்யலாம்?

- குழுவாக கூடி அமர்ந்து, ஒரு குறிப்பிட்ட வேத பகுதிகளை அல்லது வேதாகமத்தின் புத்தகங்களை ஒருவர் மாறி ஒருவராக சத்தமாக வாசிக்கலாம்.
- மனப்பாட வசனங்களை ஒப்புவிக்கும் நிகழ்ச்சியை அல்லது போட்டிகளை நடத்தலாம்.
- வேதாகம வினாடி வினா போட்டிகளை நடத்தலாம்.
- பரிசுத்த வேதாகமம் அதன் வரலாறு, பின்னணி மகத்துவங்கள், தனிநபர்களில் சமுதாயத்தில் அதன் தாக்கம் குறித்து பேசும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யலாம்.
- மேற்கண்ட இவைகளில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட நிகழ்வுகளை நேரடி (In Person) நிகழ்ச்சியாகவோ அல்லது நேரலை (Online) நிகழ்ச்சியாகவோ நடத்தலாம்.
- நேரடி நிகழ்ச்சியாக நடத்தும் பொழுது அவற்றை போட்டோ அல்லது வீடியோ வடிவில் உங்கள் தனிப்பட்ட மற்றும் சபை, குழுக்களின் சமூக வலைத்தள பக்கங்களில் பகிரலாம்.
- இவ்விதம் நேரடி மற்றும் நேரலை நிகழ்வுகளை சமூக வலைத்தள பக்கங்களில் பகிரும் போது, #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2025 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.



**பரிசுத்த வேதாகமம் புரிந்துகொள்வது கடினமானது அல்ல. அதனை உள்வாங்கிக் (உட்)கொள்வதுதான் கடினம். - ஸ்டீவ் லாசன்**

### சர்வதேச வேதவாசிப்பு வாரம் (IDBR Week) - டிசம்பர் 10 முதல் 16 வரை

இந்த ஆண்டு முதல், டிசம்பர் 16 எந்த நாளில் வருகிறது என்பதைப் பொருட்படுத்தாமல் சர்வதேச வேதவாசிப்பு தின நிகழ்ச்சிகளை எளிதாக நடத்துவதற்காக, இந்த தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒரு சர்வதேச வேதவாசிப்பு வாரமாக (டிசம்பர் 10–16) விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம்.

### IDBR 2025 - ன் கருப்பொருள்

**"பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள்; உங்கள் வாழ்வை புதுப்பித்துக் கொள்ளுங்கள்."**

### 16 டிசம்பர் 2025 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் GODependence Team ஆக நாங்கள் என்ன செய்ய இருக்கிறோம்?

- நமது வேதவாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் தனித்தனியான Zoom கூடுகைகள்.
- 10 மொழிகளிலும் அந்தந்த மொழியில் உள்ள பரிசுத்த வேதாதமத்தை வரலாறை விளக்கும் GODependence கருத்தரங்குகள்
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தனித்தனியாக ஆன்லைன் மெகா வேதாகம வினாவிடைப் போட்டி.
- தங்கள் சமூக வலைத் தள பதிவுகளை பகிர்வதற்கென WhatsApp பயன்படுத்துபவர்களுக்காக IDBR வாரத்தில் 10 மொழிகளிலும் செயல்படும் தற்காலிக வாட்சாப் குழுக்கள்.
- 16 டிசம்பர் அன்று தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடுபவர்களுக்கு சர்வதேச வேதவாசிப்பு தின ஹேஷ்டேக்குகளுடன் (#) வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்தல்.
- 10 மொழிகளிலும் தொடர் வேதவாசிப்பு நிகழ்வை (Bible Readathaon) நடத்துதல்.
- GODependence வேதவாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் தேவையிலுள்ள நபர்களுக்கு முழுவேதாகமத்தை வழங்குதல்.

--------------------

**தனிநபர்கள் அளவில் பரிந்துரைக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் GODependence குழு அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிகழவுகள் குறித்த விரிவான தகவல்கள் அடுத்த மாத இதழில் இடம்பெறும்.**

வாருங்கள்... பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் சர்வதேச வேதாகம வாசிப்பு தினத்தை நாம் ஒருமித்து முன்னெடுப்போம்.

கீழ்க்கண்ட IDBR சமூக ஊடக இணைப்புகளின் மூலம் இணைந்திருங்கள்.

#IDBR2025 Facebook Page: tinyurl.com/IDBR-Dec16-FB

#IDBR2025 Instagram: tinyurl.com/IDBR-Dec16-Insta

#IDBR2025 YouTube: tinyurl.com/y8pn8ecr

#IDBR2025 X Page: tinyurl.com/3hmbydjs

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தைப் போற்றவும், நம் வாழ்வில் பரிசுத்த வேதாகமத்தின் நித்தியமான பொருத்தத்தைக் கொண்டாடவும் நாம் ஒன்று கூடுவோம்.

இதயப்பூர்வமான எதிர்பார்ப்புடன்,
**GODependence குழு.**



உங்களை முழுவதுமாக வேத வசனங்களுக்குள் பொருத்திக் கொள்ளுங்கள். மேலும், வேதவசனங்களை உங்களுக்குள் முழுவதுமாக உட்செலுத்திக்கொள்ளுங்கள். - ஜோஹன் ஏ. பெங்கெல்

## 1
## 12 மணி நேர தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி (Bible Readathon) - 02 அக்டோபர் 2025



## 2
## GODependence கருத்தரங்கு - அக்டோபர் 2025



அக்டோபர் 2025 மாதத்திற்கான GODependence கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட முடியவில்லை. இது நவம்பர் 2025 மாதத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தலைப்பு: தமிழ் வேதாகமத்தின் வரலாறு**

**நாள் மற்றும் நேரம்:** இந்த விபரங்கள் அடுத்த மாத இதழில் கொடுக்கப்படும்.

## 3
## வேத தியான குழுக்கள் (BMG) - பயிற்சி அமர்வுகள்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், நாம் மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) இதுவரையும் தொடங்கப்படவில்லை.

**“தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது எப்படி” என்ற தலைப்பில் இதற்கான பயிற்சிகள் நவம்பர் 2025 மாதத்தில் நடைபெறுகின்றன. முதல் பயிற்சி நடைபெறும் நாள் 09.11.2025**

இந்த பயிற்சி குறித்த கூடுதல் விவரங்கள் வேதவாசிப்பு சவால் குழுக்களில் பகிரப்படும்.



FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ் (Instagram)

GODependence - தமிழ் (YouTube)

GODependence (Web)

GODependence - தமிழ் (Facebook)

GODependence (X)

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**உங்கள் சிந்தனைகளைக் குறைவாகவும், (வேதாகமத்தில் உள்ள) தேவனுடைய சிந்தனைகளை மிக அதிகமாகவும் செவிமடுத்துக் கேளுங்கள்.**

**- பிரன்கோயிஸ் ஃபெனிலன்**